# 18 கலந்துரையாடலும் கருத்தாடலும்

## இலக்கு

*இப்பயிற்சியின் தேவையென்னவெனில் மாணவர்களுடைய கருத்தாடல் திறமையையும் பொருத்தமான மதிநுட்பங்களையும் மேம்பாடடையவைக்கவும் பெருக்குதற்குமாகவேயாம். மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தலைப்புத் தொடர்பான கருத்தினைக் குறித்துக்காட்ட வேண்டும்; பொருத்தமான கருத்தாடல்களைத் தேடவேண்டும்; பிறவற்றுக்கு எவ்வாறு அவர்கள் எதிர்வினை ஆற்றுவர் என்பது பற்றிக் கருதவேண்டும், அவை எதிர் நிலைகளும் கருத்தாடலுமாகவும் அமையலாம்.*

தரம் 4 - 9

20 - 40 மணித்துளிகள்



**நடைமுறை:**

- தொடக்கப் புள்ளியானது ஒரு கூற்று, வினா, ஆய்வறிக்கை அல்லது வலியுறுத்தல்: இது கலந்துரையாடலுக்கு குறிப்பிட்ட ஆற்றல் வளம் உடையதாக அமையவேண்டும். தலைப்பு மாணவர்களின் பட்டறிவு உலகத்திலிருந்து ("சிறுமிகளைவிட சிறுவர்களுக்கு ஏன் கூடிய கட்டற்றநிலை கொடுபடுகின்றது?", "வீட்டு வளர்ப்பு விலங்குகளை ஏன் வெறுக்கின்றார்கள்?") தற்போதைய அரசியல் கருப்பொருளிலிருந்து ("வெளிநாட்டவர் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென்ற வற்புறுத்தல் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?") பிறந்த நாட்டுடன் தொடர்பாக ("இன்னும் 20 ஆண்டுகளில் இந்த நாட்டிலா அல்லது உங்கள் பெற்றோர் நாட்டிலா? ஏன்?"). கலந்துரையாடல் தலைப்பு ஆசிரியராலோ / மாணவர்களாலோ முன்மொழியப்படலாம் , இது மிக நல்லது.
- கருப்பொருளைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுக்களினால் கலந்துரையாடல் ஏற்படுத்தப்படலாம், அல்லது தொடக்கத்திலிருந்தே சார்பாகவும் எதிராகவுமான கருத்தாடல் திட்டமிடப்படலாம். இதனால் மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து தம்முடைய சார்பு - எதிர்வுக் கருத்துகளை அமைத்துக்கொள்வர். முடியுமாயின், எல்லா மாணவர்களும் தங்கள் சார்பு - எதிர்வுகளைக் கருத்திற் கொண்டு அவற்றை திறவுச் சொற்களிலே பதிவுசெய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.




- ஓர் இடைச் சுற்றை உள்நுழைக்கலாம். அதனூடாக முதல்மொழியில் மொழி மற்றும் வாக்கியக் கட்டமைப்புத் தொகுதிகள் சேர்க்கப்படுகின்றன (அவை பயன்படுத்தப்பட்டுப் பார்க்கப்படுகின்றன) பார்க்கவும்: முன்னுரையில் இயல் 1இ, அத்துடன் #10 இ #12.
- கலந்துரையாடலுக்கு அல்லது கருத்தாடலுக்கு, முன்னர் ஏற்றுக்கொண்ட கலந்துரையாடல் விதிகள் பயன்படுத்தப்படும். (பார்க்கவும்: #9). அது குறிப்பாக நடுத்தீர்வு மற்றும் சமத்துவமான நிலையினை உறுதிப்படுத்தும்.
- கலந்துரையாடலில் தலைமை வகிபாகத்தினையும் ஏனைய வகிபாகங்களையும் மாணவர்களே வகிக்கலாம். பார்க்கவும் #14 உம் 15 உம். கருத்து வேறுபாட்டுத் தலைப்புகள் பற்றிய சார்பு எதிர்வுக் கலந்துரையாடலில் தலைமை வகிபாகங்களை வரையறை செய்வது குறிப்பாக இன்றியமையாததாகும்.
- கலந்துரையாடல் தலைமையின் குறிப்பாக இன்றியமையாத பணிகளுள் வெவ்வேறு பிரிவுகளுக்கும் நிலைகளுக்குமிடையே சமச்சீரான பேச்சு நேரங்களையும் சமச்சீரான உரையாடற் பகிர்வினையும் உறுதிப்படுத்துவதுமாகும்.
- கலந்துரையாடலைத் தொடர்ந்து ஒரு சிறிய உருக்காட்டல் மற்றும் மதிப்பீடு பற்றிய சுற்று நடைபெறவேண்டும். எது நன்றாக நடந்தது, அடுத்த சுற்றில் எதற்கு நாம் இன்னும் கூடிய கண்காணிப்பு வழங்கவேண்டும்?